இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 10-08-2023

# யார் தடுத்தது? - 2

**வே**ளாண் சட்டங்கள் மூலமாக இந்திய விவசாயிகளை மொத்தமாக முடக்கி வைக்க நினைத்தது பா.ஜ.க. ஆட்சி.

*** விவசாயிகளின் உற்பத்தி வர்த்தகம் மற்றும் வணிகம் (ஊக்கப்படுத்தல் மற்றும் வசதி செய்தல்) மசோதாவின் மூலம் குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் என்ற நடைமுறையே முற்றிலுமாக வழக்கொழிந்து போகும். இந்த மசோதா, விவசாயிகள், இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைத் தவிர்த்து விட்டு யாருக்கு வேண்டுமானாலும் விற்பனை செய்து கொள்ளலாம் என்று சொல்கிறது. இதன்மூலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும் குறைந்தபட்ச ஆதார விலையும் இன்ன பிற வசதிகளும் முற்றிலும் ஒழித்துக்கட்டப்படும்.**

*** விவசாயிகள் (முன்னேற்றம் மற்றும் பாதுகாப்பு) விலை உறுதியின் மீதான ஒப்பந்தம் மற்றும் விவசாய சேவை மசோதாவின்படி, விவசாயம் சார்ந்த தொழில் நிறுவனங்கள் அல்லது மெகா சில்லறை வியாபாரிகள் எனப்படும் கார்ப்பரேட் நிறுவனங்கள் என்ன சொல்கிறதோ அதுதான் விலையாக மாற்றப்படும்.**

*** அத்தியாவசியப் பொருட்கள் (திருத்த) மசோதாவின் படி, பொருட்களைப் பதுக்கி வைத்து தேவையைப் பெருக்கி, அதன் மூலம் விலையைக் கூட்டி அதிக லாபம் பார்க்கலாம். அவசியப் பொருட்களை, அவசியப் பொருட்கள் பட்டியலில் இருந்து நீக்கிவிட்டது. ஸ்டாக் வைக்கும் வரையறையையும் தளர்த்தி விட்டது.**

- இந்த மூன்று சட்டங்களுக்கும் எதிராக இந்திய விவசாயிகள் வீறு கொண்டு எழுந்தார்கள். தலைநகர் டெல்லியையே முடக்கினார்கள். அவர்கள் நடத்திய படையெடுப்பு - இந்த மூன்று சட்டங்களையும் திரும்பப் பெறுகிறோம் என்று சொல்லும் வரைக்கும் தொடர்ந்தது. 'இரும்பு மனிதர்' மோடியை அடிபணிய வைத்தார்கள் இந்திய விவசாயிகள். இத்தகைய போராட்டம் நடத்தாமல் இருந்திருந்தால் மூன்று வேளாண் சட்டங்கள் நடைமுறைக்கு வந்திருக்கும். இருந்த வாய்ப்புகளையும் மொத்தமாக இழந்திருப்பார்கள் விவசாயிகள். விவசாயிகள் வருமானத்தை இரண்டு மடங்கு ஆக்குவேன் என்ற வாக்குறுதி நிறைவேறியதா என்றால் இது வரை இல்லை. **இப்படிச் செய்யவிடாமல் தடுத்தது யார்? எதிர்க்கட்சிகளா?**

**2 கோடி பேருக்கு வேலை:**

**"ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை தருவோம்" என்றார் பிரதமர் மோடி. தரப்பட்டதா? இல்லை.**

இந்தியப் பொருளாதாரத்தை கண்காணிக்கும் மையத்தின் (CMIE) படி, ஆகஸ்ட் 2022 இல் வேலையின்மை விகிதம் 12 மாதங்களில் இல்லாத அளவுக்கு 8.3 சதவீதத்தைத் தொட்டுள்ளது. இளைஞர்களின் வேலையின்மை விகிதம் 42 சதவீதமாக இப்போது உள்ளது. இதுதான் பா.ஜ.க. ஆட்சியின் சாதனையாகும்.

நவம்பர் 8, 2016 அன்று, பிரதமர் மோடி பணமதிப்பிழப்பு நடவடிக்கையை அறிவித்தார். இதன் விளைவாக 50 லட்சம் பேர் வேலையை இழந்தார்கள். காலமுறை தொழிலாளர் கணக்கெடுப்பை PLFSஇன்படி 2017-18 வேலைவாய்ப்பின்மை 45 ஆண்டுகாலம் இல்லாத அளவுக்கு உச்சத்தை தொட்டது. மிக மோசமான ஜி.எஸ்.டி. வரியும் தொழில் வளர்ச்சியை முடக்கி வேலை வாய்ப்பைக் குறைத்தது. அடுத்து வந்தது கொரோனா. நோய் பரவாமல் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடாமல், தடுப்பூசியும் போடாமல் பா.ஜ.க. அரசு இருந்தது. அவர்களுக்குத் தெரிந்த ஒரே தீர்வாக ஊரடங்கு மட்டுமே இருந்தது. இதுவும் பலரது வேலையைக் காலி செய்தது. 2 கோடிப் பேர் வேலையை இழந்தார்கள். வேலை இழப்புகள் அதிகமாக தொடரும் காலமாக மோடி ஆட்சிக் காலம் இருந்தது.

ஒன்றிய பணியாளர் துறை அமைச்சர், கடந்த எட்டு ஆண்டுகளில் 22 கோடி அரசு வேலை விண்ணப்பங்கள் பெறப்பட்டதாகவும், 7.2 லட்சம் பேருக்கு மட்டுமே வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். 2014 முதல் ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை தந்திருந்தால் ஒன்பது ஆண்டு காலத்தில் 18 கோடி பேருக்கு வேலை கிடைத்திருக்க வேண்டும். கிடைத்ததா? என்றால் இல்லை.

**நாட்டில் அதிகமாக பதிவு செய்து, வேலை கிடைக்காமல் இருப்பவர்களின் எண்ணிக்கை 45 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 2022 ஆம் ஆண்டு உயர்ந்தது. இதுதான் பா.ஜ.க. ஆட்சியின் சாதனையாகும். இதுதான் பா.ஜ.க. ஆட்சியில் வேலை பெறுவோர் நிலைமை ஆகும். அதனால்தான் பிரதமர் மோடி அவர்களின் பிறந்தநாளை 'வேலைவாய்ப்பின்மை தினமாக' கொண்டாடி வருகிறது இளைஞர் காங்கிரஸ். இது பொருத்தமான பெயராகவே அமைந்துள்ளது.**

கடந்த ஆண்டு நவம்பரை விட டிசம்பரில் வேலை வாய்ப்பின்மை அதிகம் ஆனது. நவம்பரில் வேலை வாய்ப்பின்மை விகிதம் 8 விழுக்காடு என்றால் டிசம்பரில் 8.3 விழுக்காடு ஆனது. **இது யார் குற்றம்? எதிர்க்கட்சிகளின் குற்றமா?**

ஒன்பது ஆண்டுகள் அமைதியாக இருந்துவிட்டு, 10 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை உடனடியாகத் தர வேண்டும் என்று கடந்த ஆண்டு அறிவித்தார் பிரதமர். 18 மாதங்களில் 10 லட்சம் பேருக்கு வேலை என அறிவிக்கப்பட்டது. அதிலும் 70 ஆயிரம் பேருக்குத்தான் வேலை தரப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. ஒன்றிய அரசின் பல்வேறு துறைகளில் 8.72 லட்சம் காலிப்பணியிடங்கள் இருப்பதாக பணியாளர் துறை இணை அமைச்சர் ஜிதேந்தர சிங் கடந்த ஆண்டு சொன்னார். அதனை நிரப்பும் எந்த முயற்சியும் பா.ஜ.க. அரசிடம் இதுவரை இல்லை.

இப்படி தான் சொன்ன -

*** கருப்புப்பணத்தை மீட்பேன், 15 லட்சம் வரை இந்தியர்கள் பெறலாம்.**

*** விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விலையை இரண்டு மடங்கு ஆக்குவேன்.**

*** ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு அளிப்பேன் - ஆகிய மூன்று முக்கியமான இந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு விட்டதா? இல்லை என்றால், அதனை நிறைவேற்ற முடியாமல் தடுத்தது எதிர்க்கட்சிகளா?**

●●

---

ஆவின் நிறுவனத்தின் நிருவாக மேம்பாட்டிற்காக

## திருச்சி IIM உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

### அமைச்சர் மனோ தங்கராஜ் முன்னிலையில்

சென்னை, ஆக. 10 -

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் சென்னை, நந்தனம் ஆவின் இல்லத்தில் நேற்று முன் தினம் (8.8.2023) மாலை ஆவின் நிறுவனத் தின் நிருவாக மேம்பாட்டிற்காக திருச்சி IIM உடன் புரிந் துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தெரிவித்ததாவது:

ஆவின் நிறுவனத்தின் வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காகவும், மனிதவள மேம்பாட்டை உறுதிப்படுத்தவும், ஆலோசனைகள் வழங்குவதற்காகவும், முறையான மேலாண்மை செய்வதற்காகவும் அதன்மூலம் நிறுவனத்திற்கு அதிக பயன் கிடைக்கின்ற விதத்தில் தொழில்நுட்ப மேம்பாட்டை உறுதிப்படுத்தி ஆவின் சேவைகளை மேம்படுத்த திருச்சி IIM உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளோம். நிச்சயமாக இது ஆவின் நிருவாகத்தின் வளர்ச்சிக்கு ஒரு மைல் கல்லாக அமையும்.

ஆவின் நிறுவனம் சிறந்த கட்டமைப்பு உள்ளது அனைத்து பிரிவுகளிலும் உள்ள ஊழியர்களுக்கு அவர்கள் துறை சார்ந்த திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்க இருக்கிறோம். விவசாயிகளுக்கு உடனடி ஒப்புகைச் சீட்டு (Spot Acknowledgement) வழங்கும் முறை மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. ஆவின் நிருவாகத்தை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 6.9% மின்சாரம் சேமிக்கப்பட்டு சுமார் 30 லட்சம் ரூபாய் சேமிக்கப்பட்டுள்ளது. 200க்கும் மேற்பட்ட புதிய சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளது அனைத்து மாவட்டங்களிலும் பால் உப பொருட்களின் தரம் மற்றும் சுவை ஒரே மாதிரியான அளவை கொண்டதாக விரைவில் செயல்படுத்தப்படும்.

இந்நிகழ்வில், பால்வளத் துறை இயக்குநர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.வினீத், டாக்டர் பவன் குமார் சிங், இயக்குனர் IIM திருச்சி, சரவணன், பேராசிரியர் IIM திருச்சி கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (9.8.2023) முகாம் அலுவலகத்தில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் சந்தித்து, திராவிடர் கழகத்தின் சார்பில் தஞ்சாவூரில் அக்டோபர் மாதம் நடைபெறவுள்ள கலைஞர் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அழைப்பு விடுத்தார்.

---

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில்

## தமிழ்நாடு வனம் - வன உயிரினக் குற்றங்கள் கட்டுப்பாட்டுப் பிரிவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்! இலச்சினை வெளியிட்டார்!

சென்னை, ஆக.10-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.08.2023) தலைமைச் செயலகத்தில், சுற்றுச் சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில் சென்னை, சைதாப்பேட்டை, பனகல் மாளிகையில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வனம் மற்றும் வன உயிரினக் குற்றங்கள் கட்டுப்பாட்டு பிரிவினைத் திறந்து வைத்து, அதற்கான இலச்சினையை வெளியிட்டார்.

வனத்துறையின் 2021-22ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், மாநில அளவில் திட்டமிடப்பட்ட வன உயிரினக் குற்றங்களைக் கண்டறிந்து தடுக்க வனம் மற்றும் வன உயிரினக் குற்றங்கள் கட்டுப்பாட்டு பிரிவு ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு வனம் மற்றும் வன உயிரின குற்றங்கள் கட்டுப்பாட்டு பிரிவு நிறுவப்பட்டு, முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

திட்டமிட்ட வனம் மற்றும் வன உயிரின குற்றங்களைத் தடுக்கும் வகையில் பிரத்யேகமாக ஏற்படுத்தப்பட்டுள்ள இப்பிரிவு, வன உயிரினக் குற்றங்கள் குறித்த தகவல் மற்றும் நுண்ணறிவு விபரங்களை சேகரம் செய்தல், சட்டவிரோதமாக வன உயிரினங்கள் மற்றும் வன உயிரின பொருட்கள் விற்பனை செய்யப்படுவதைத் தடுத்தல், உலகளாவிய அமைப்புகளுடன் ஒன்றிணைந்து செயல்படுதல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோள்களாகக் கொண்டு செயல்படுகிறது.

மேலும், வன உயிரினக் குற்றங்கள் தொடர்பான நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை ஏற்படுத்துதல், வனங்களை ஒட்டி வாழும் பகுதிகளில் உள்ள மக்களிடையே தகவல் கட்டமைப்பை மேம்படுத்துதல், வன உயிரினக் குற்றங்கள் சார்ந்த தரவுகளைச் சேகரித்தல் மற்றும் வன உயிரினக் குற்றங்கள் அதிகமாக நிகழ்ந்துள்ள இடங்களை வரைபடமாகத் தயாரித்தல் ஆகியவை இப்பிரிவின் முக்கியச் செயல்பாடுகள் ஆகும்.

இப்பிரிவின் தலைமையகம் சென்னை, சைதாப்பேட்டை, பனகல் மாளிகையில் அமைக்கப்பட்டு, இயக்குநரை தலைவராகவும், சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் இராமநாதபுரம் ஆகிய நான்கு மண்டலங்களில் துணை இயக்குநர்களின் தலைமையிலும் செயல்பட்டு வருகிறது. மேலும், இந்தப் பிரிவில் 118 முன்கள வனப்பணியாளர்கள் தற்போது பணியாற்றி வருகின்றனர்.

இப்பிரிவின் வாயிலாக 190-க்கும் அதிகமான வன உயிரினக் குற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் யானை தந்தங்கள் மற்றும் யானைத் தந்தத்திலான பொருட்களை விற்பனை செய்தல், புலித்தோல் மற்றும் அதன் பாகங்களை சட்டவிரோதமாக விற்பனை செய்தல் மற்றும் சட்டவிரோதமாக பாம்புகள், கிளிகள், கடல் சங்குகள், கடல் அட்டைகள் ஆகியவை வைத்திருந்த குற்றங்கள் என 50-க்கும் மேற்பட்ட வனக்குற்றங்களில் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து வன உயிரினப் பொருட்கள் பறிமுதல் செய்து வழக்கு பதிவு செய்யப்பட்டு மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வன பாதுகாவலர் மற்றும் மற்றும் முதன்மை வனஉயிரினக் காப்பாளர் ஸ்ரீனிவாச ஆர் ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (பாதுகாப்பு, விழிப்புணர்வு மற்றும் தமிழ்நாடு வனம் மற்றும் வனஉயிரின குற்றக்கட்டுப்பாடு பிரிவு) ஆகாஷ் தீப் பருவா, (புலிகள் திட்டம்), வன உயிரின குற்றக்கட்டுப் பாட்டு பிரிவு இயக்குநர் திருமதி.இரா.காஞ்சனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

தமிழகத்தில் உள்ள அனைத்துப்

## பள்ளிகளுக்கும் வானவில் மன்றத் திட்டம்!

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தகவல்!

திருச்சி, ஆக. 10 -

தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் வானவில் மன்ற திட்டத்தைக் கொண்டு செல்ல வேண்டும் என்று பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசுகையில் குறிப்பிட்டார்.

திருச்சி, காட்டூர் ஆதிதிராவிடர் நல பெண்கள் மேல் நிலைப் பள்ளியில் அமெரிக்கன் இந்தியா பவுண்டேஷன் மற்றும் தமிழக பள்ளிக் கல்வித்துறையின் வானவில் மன்றம் இணைந்து ட்ரோன் சாட்டிலைட் ஏவுதல் குறித்த அறிமுக விழா மற்றும் ஸ்டெம் கண்டுபிடிப்பு கற்றல் மையம் தொடக்க விழா ஆகியவை செவ்வாய்க்கிழமை திருச்சியில் நடைபெற்றது. விழாவுக்கு தலைமை வகித்து, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மேலும் பேசியது: தமிழக முதல்வரால் வானவில் மன்றம் என்ற திட்டம் ரூ. 25 கோடி. மதிப்பில் தொடங்கப்பட்டு, 710 குழுக்களின் மூலம் சுமார் 27 லட்சம் மாணவ, மாணவிகள் பயனடையும் வகையில் கற்பிக்கப்படுகிறது. தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ப மாணவர்கள் தங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

படிப்போடு தனித்திறன்களையும் மாணவ, மாணவிகள் வளர்த்துக் கொள்வது அவசியம். நகர்ப்புற மாணவர்கள் மட்டுமல்லாது. கிராமப்புற அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களையும் சென்னை ஐ.ஐ.டி. போன்ற கல்வி நிறுவனங்களுக்கு கொண்டு வர வேண்டும். தமிழகத்தில் உள்ள 38 ஆயிரம் பள்ளிகளுக்கும் வானவில் மன்ற திட்டத்தைக் கொண்டு செல்ல வேண்டும். அதற்கான விதையைத் தான் தற்போது விதைத்துள்ளோம் என்றார்.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக இஸ்ரோ முன்னாள் திட்ட இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை பங்கேற்று பேசியது : வானவில் மன்றம் தமிழகம் முழுவதும் சிறப்பாக செயல்படுகிறது. அரசு, ஆசிரியர், மாணவர், பெற்றோர், ஊடகம் இணைந்து செயல்பட்டால் கல்வியில் சிறந்த நிலையை அடையலாம். ஸ்டெம் திட்டம் தமிழகத்தில் 2 மாவட்டங்களில் செயல்படுகிறது.

அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும்போது நாட்டுக்கு மட்டுமல்ல, உலகத்துக்கே நம் அரசுப் பள்ளிகள் பெருமையாக உயர்ந்து நிற்கும். மாணவர்கள் வெற்றி பெறுவதற்கான உயரம் காத்திருக்கிறது. அதனை அடைவதற்கான தகுதியை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

தொடர்ந்து ட்ரோன், ராக்கெட் உள்ளிட்ட மாணவர்களின்பல்வேறு படைப்புகளை அவர்பார்வையிட்டு கலந்துரையாடி, அலோசனைகளை வழங்கினார். முன்னதாக, ஸ்டெம் கண்டு பிடிப்பு. அதன் கற்றல் மையத்தையும் அவர் திறந்துவைத்தார். விழாவில், வானவில் மன்றம் சார்பில் புராஜெக்டர், மடிக்கணினி (லேப்டாப் உள்ளிட்ட உபகரணங்கள் கோவை, காஞ்சிபுரம். செங்கல்பட்டு உள்ளிட்ட 8 மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களிடம் வழங்கப்பட்டது. மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் எம். சிவக்குமார், அமெரிக்கன் இந்தியா பவுண்டேஷன் டிஜிட்டல் திட்ட தலைமை நிர்வாகி டி.பாஸ்கரன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

## சென்னை

### இலக்கிய அணி சார்பில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை, ஆக. 10 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு சென்னை தென் மேற்கு மாவட்ட இலக்கிய அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் விஜய் வெங்கடேசன் ஏற்பாட்டில் 7.8.2023 அன்று மயிலாப்பூர் லஸ் சந்திப்பு மெயின் ரோட்டில் - முத்தமிழிறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மரியாதை செலுத்தி பின்னர் பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

மாவட்டச் செயலாளர் - மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை தாங்கி பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார். பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி, நந்தனம் கி.மதி, வட்ட செயலாளர் ஏ.தாஸ், வட்ட பொறுப்பாளர் மா. பா.அன்பு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள், எப்போதும் வென்றான் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நியாய விலைக் கடை கட்டடத்தினை திறந்து வைத்தார். உடன் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ.ஜெகன், ஒட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் காசிவிஸ்வநாதன், விளாத்திக்குளம் மத்திய ஒன்றியச் செயலாளர் ராமசுப்பு, மேற்கு ஒன்றியச் செயலாளர் அன்பு ராஜன், விளாத்திக்குளம் பேரூர்க் கழகச் செயலாளர் வேல்சாமி, ஒட்டப்பிடாரம் யூனியன் சேர்மன் ரமேஷ், ஊராட்சி மன்றத் தலைவர் முத்துக்குமார், ஒன்றியக் குழு உறுப்பினர் வெள்ளைச்சாமி ஆகியோர் உடன் உள்ளனர்.